வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 83/2020

வழக்கு சாட்சி LW11 /PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயந்தி, காவல் உதவி ஆய்வாளர், காவல் ஆணையரக அலுவலகம், ஆவடி | ஜாதி | |
| கணவர்/தந்தை | பிரபாகரன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 41 |

தேதி 27.02.2025

1,2 எதிரிகள் ஆஜர் இல்லை. 3,4 எதிரிகள் ஆஜர். மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆவடி காவல் ஆணையரக அலுவலகத்தில் உதவி ஆய்வாளராக அம்பத்தூர் மதுவிலக்கு பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2017ம் ஆண்டு நான் சென்னை புழல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது 11.10.2017 அன்று உயர்நீதிமன்ற ஆணையின்படி சம்பூரணம், க/பெ. காமராஜ் என்பவர் நிலைய குற்ற எண். 1943/2017ஆக இதச பிரிவுகள் 294(b), 448, 427, 506(i) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கையினை எதிரிகள் மீது பதிவு செய்தேன். மேற்படி புகார்தாரர் அளித்த புகாரானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி முதல்

தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தினை சாட்சிகள் சுமதி, ராமச்சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜரானது அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபபடமானது அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் சம்பவ இட சாட்சிகளான பழனி, காசி, பத்மா, ஆண்டாள் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகள் நால்வரும் சென்னை உயர்நீதிமன்ற ஆணையின்படி முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்யப்படவில்லை.

குறுக்கு விசாரணை

1. சம்பவம் என்று நடந்தது என்றால் 24.06.2017. புகார் என்று பெறப்பட்டது என்றால் 28.06.2017. புகாரின்மீது விசாரணை செய்யப்பட்டு அதன்பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை என்று பதிவு செய்யப்பட்டது என்றால் 11.10.2017. புகார்தாரர், சாட்சிகளை என்று விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன் என்றால் 11.10.2017. புகாரில் யார்மீது அளித்துள்ளார்கள் என்றால் குணசேகர், விநாயகமூர்த்தி, முருகேசன், அமுலு, கங்கம்மாள். விசாரணையின்போது கங்கம்மாள் 11.10.2017க்கு முன்பே இறந்துவிட்டதாக தெரியவந்தது. இறந்த கங்கம்மாள்மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டபின்பு சாட்சிகளிடம் விசாரணை செய்தபோது கங்கம்மாள் இறந்த விபரம் தெரியவந்தது. கங்கம்மாள் இறந்தபின்பு

இறுதி அறிக்கையில் கங்கம்மாளின் பெயர் நீக்க வில்லை என்றால் ஆமாம். அவசர கதியில் வழக்கினை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரர் மகள் குளிக்கும்போது எதிரிகள் படம் எடுத்ததாக கூறப்பட்டுள்ளது வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். காமராஜ், சரளா வாக்குமூலத்திலும், புகைப்படம் எடுத்தது கூறவில்லை என்றால் சரிதான். சரளாவை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். தவறாக படம் எடுத்ததினை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையிலும் வாக்குமூலத்திலும் முன்னுக்கு பின் முரணாக அளிக்கப்பட்ட வாக்குமூல்த்தினை பரிசீலனை செய்யாமல் எதிரிகள் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யாக புகாரின்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. குடிசையினை பிரித்து எரிந்ததில் விசாரணை செய்து புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சிகள் அ.சா.3,4,5,6 சம்பவத்தினை பற்றி தெரியாது என சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல. எனவே பொய்யான புகாரில் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஏற்கெனவே புகார்தாரருக்கும் எதிரிக்கும் சொத்து தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது என்றாலும், அதில் பழி தீர்க்க வேண்டும் என்பதற்காக பொய்யாக இப்புகாரானது அளிக்கப்பட்டு வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**